காட்பாடிக்குக் குடிநீர்த் திட்டம்

*643 வினா.—திரு. துரைமுருகன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) காட்பாடியில் குடிநீர் பிரச்னையை தீர்ப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) வட ஆர்க்காடு மாவட்டம் காட்பாடி விரிவுப்பகுதி (காட்பாடி பேரூராட்சியிலிருந்து வேறுபட்டது) தாராபடவேடு, கனிஞ்சூர் பேரூராட்சிகள், விருதம்பட்டு ஊராட்சி மன்றம் ஆகியவற்றிற்கு ஒருங் கிணைந்த நீர் வழங்கு திட்டத்தை ஆய்வு செய்வதற்காக மதிப்பீட்டுத் தொகை ரூ. 20,000 வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்மூலம் எத்தனை ஆயிரம் மக்கள் பயனடைவார்கள் ? வளர்ந்து வரும் நகரம் காட்பாடி அதற்குப் பின்னாலும் இந்தப் பிரச்னையைத் தீர்க்கப்படுகிற வகையில் அந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதுதான் அதனுடைய ஆய்வு வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. காட்பாடி பேரூராட்சி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று இப்போது உத்தரவிடப் பட்டுள்ளது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, தமிழகத்திற்கு என்று குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக மத்திய அரசு ஏதாவது தொகை ஒதுக்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் குடி நீர் வாரியத்தின் மூலமாக ஆங்காங்கு இருக்கின்ற நகராட்சிகளிலே அவர்கள் தருகின்ற தொகையோடு, எல். ஐ. சி. மூலமாக நாம் தொகையினைப் பெற்று, அந்தப் பணியை குடிநீர் வாரியத்தின் மூலமாக ஆற்றிவருகிறோம். இவைக ளெல்லாம் கிராமங்களில் நடைபெற வேண்டிய காரியங்கள். நம்முடைய உள்ளாட்சித் துறையின் சார்பாக நடைபெற்று வருகிறது. தனியாக இதற்கென்று மத்திய அரசு எதுவும் பணம் ஒதுக்கவில்லை.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, கடந்த ஆண்டுகளில் குடி நீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக வறட்சி நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு ஊராட்சிக்கும், ஒன்றியத்திற்கும் அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு நேரடியாக உதவிசெய்ததுபோல் இந்த ஆண்டும் தொடர்ந்து செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த ஆண்டு வறட்சி இல்லை.